# கருவூல கணக்குத் துறை

அனுப்புநர்
திரு. தென்காசி சு ஜவஹர் இ ஆ ப
முதன்மை செயலர்/ ஆணையர்
கருவூலம் மற்றும் கணக்குத்துறை
பனகல் மாளிகை 2வது மாடி
சைதாப்பேட்டை
சென்னை 600 015.
அலுவலகம் : 044-24342438, 24357412
அலைபேசி : 97187 33070
94455 43074

பெறுநர்
1. இணை இயக்குநர்,
மாவட்ட கருவூலம், காஞ்சிபுரம்,
2. அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
3. ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்,
சென்னை

ந.க. எண் 48827 /உ2 /2016 நாள் 12.10.2016

அய்யா / அம்மையீர்,

பொருள் : ஓய்வூதியம் – ஓய்வூதியர்கள் கருவூலங்களுக்கு நேரில் வருகை புரிதல் – ஓய்வூதியர்கள் குறைகள் நிவர்த்தி செய்தல் – குறித்து.

-----

மாநில அரசின் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசு பணியாளர்களின் ஓய்வூதியம் வழங்கும் பணியினை கருவூலம் மற்றும் கணக்குத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மாவட்ட கருவூலங்கள், சார்கருவூலங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகியவை செய்து வருகின்றன. இதுதொடர்பாக பின்வரும் அறிவுரைகளை இணை இயக்குநர், மாவட்டக் கருவூலம், காஞ்சிபுரம், ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை, மாவட்டக் கருவூல அலுவலர்கள் மற்றும் உதவிக் கருவூல அலுவலர்கள் தவறாது கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**1. ஓய்வூதியர்களுக்கான பணப்பயன்களை உடன் அளித்தல்**

ஓய்வூதியர்கள் தங்கள் பணிகாலத்திற்குப் பிறகு தங்களது ஓய்வூதிய பலன்களைப் பெறுவதற்கு அடிக்கடி கருவூலத்திற்கு வருவதில் பல சிரமங்கள் ஏற்படுவதாக அறியப்படுகிறது. ஓய்வூதியரின் முதல் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு சம்பந்தப்பட்டவரிடம் ஓய்வூதிய விதிகளில் / அரசாணைகளில் / இயக்கக சுற்றறிக்கைகளில் / மாநில கணக்காயரின் கடிதங்களில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை மட்டுமே ஓய்வூதியர்களிடமிருந்து கோரி உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஓய்வூதியத்தை தொகுத்துப் பெறல் (Commutation), ஓய்வூதிய தொகுத்துப் பெறல் மீட்சி செய்தல் (Restoration of commutation), 80 வயது மற்றும் அதற்குமேல் பூர்த்தியான ஓய்வூதியர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் வழங்குதல் போன்றவற்றை ஓய்வூதியரிடமிருந்து கோரிக்கை கடிதம் ஏதும் பெறப்படாமல் உரிய காலத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.

**2. ஓய்வூதியர்களை கண்ணியமாக நடத்துதல் மற்றும் வசதிகள் அளித்தல்**

ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் / மாவட்ட மற்றும் சார் கருவூலங்களுக்கு வருகைபுரியும் ஓய்வூதியர்களை கண்ணியமாகவும் உரிய மரியாதையுடனும் நடத்த அலுவலகத்தில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் அறிவுரை வழங்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் ஓய்வூதியர்களுக்கு இருக்கை வசதிகள், சக்கர நாற்காலி வசதி மற்றும் குடிநீர் வசதிகள் அலுவலகத்தில் ஏற்படுத்தி வைத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**3. ஓய்வூதியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

ஓய்வூதியர்களில் பலருக்கு தங்களின் ஓய்வூதிய பணப்பலன்கள் மற்றும் கருவூலத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டிய விபரங்கள் அறிவதில்லை. குறிப்பாக குடும்ப ஓய்வூதியர்கள் தங்களுக்கான குடும்ப ஓய்வூதிய பலன்கள் (வாழ்வு கால நிலுவைத்தொகை, குடும்ப பாதுகாப்பு நிதி, கூடுதல் ஓய்வூதியம், ஓய்வூதியர் புதிய காப்பீட்டு திட்டங்கள், வருடாந்திர நேர்காணல்) பற்றிய விபரங்கள் அறிவதில்லை. எனவே குடும்ப ஓய்வூதியர்களிடத்தில் பலன்கள் மற்றும் நேர்காணல் குறித்த விழிப்புணர்வினை உருவாக்க வேண்டும். மூன்றுமாதங்களுக்கொருமுறை நடைபெறும் ஓய்வூதிய சங்கங்களின் கூட்டத்தில் சங்க உறுப்பினர்களுக்கு இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த தெரிவிக்கப்பட வேண்டும். ஓய்வூதியர்கள் மாவட்ட மற்றும் சார்கருவூலத்தையோ/ ஓய்வூதிய அலுவலகத்தையோ அணுகும்போது அவர்களுக்கு வேண்டிய தகவல்கள் மற்றும் உரிய படிவங்களையும், படிவங்களை பூர்த்தி செய்வதில் உதவி புரிந்தும், தேவையான விபரங்களை எழுத்து பூர்வமாகவும் அளித்து அவர்களது அலைச்சலை தவிர்த்து உடனுக்குடன் குறைகளை நிவர்த்தி செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பாக ஓய்வூதியர் குறை தீர்க்கும் பதிவேட்டில் குறைகளை பதிவு செய்து உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டும், ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வூதிய சங்கங்களிடம் இருந்து புகார்கள் ஏதும் எழா வண்ணம் நடந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதன்மை செயலர்/ஆணையருக்காக
கருவூலம் மற்றும் கணக்குத்துறை

நகல்
அனைத்து ஓய்வூதிய சங்கம்
கருவூல கணக்கு இணையதளம்
முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் மேஜைக்கு